**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர்.**

**முன்னிலை : செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ஆம் நாள் வியாழன்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் ஆனி 18-ம் நாள்
CNR. No. TNCD06-003742-2023
ஆண்டுபட்டிகை வழக்கு எண். 482/2026

**(As occurrence and filing of this case was before 01.07.2024, the provisions of BNS and BNSS is not applicable in this case)**

அரசுக்காக, உதவி ஆய்வாளர்
தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம்
குற்ற எண். 367/2022

....குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

கொளஞ்சியப்பன் (வயது-45)
த/பெ. ராகவன் ....எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட**
**R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.-ன்படி**
**CASE SUMMARY**

| | | | |
|---|---|---|---|
| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Station Bail |
| | -- | -- | 12.09.2022 |
| ii) Date of filing of the | Filing of complaint | Filing of Final Report | |

| | | | |
|---|---|---|---|
| Complaint / Final report in the Court | 03.09.2022 | 31.10.2022 | |
| iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973 | 19.06.2023 | | |
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | - | - | - |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1.திரு. சங்கமேஸ்வரன் | 14.07.2023 | 12.05.2026 |
| | 2.திரு. சங்கீதராஜ் | 14.07.2023 | 12.05.2026 |
| | 3.திரு. சசிதர் | 14.07.2023 | 12.05.2026 |
| | 4.திரு. அருண்குமார் | 13.08.2024 | 13.08.2024 |
| | 5.திருமதி.தீபலட்சுமி (மருத்துவர்) | 06.03.2026 | 06.03.2026 |
| | 6.திரு. முஸ்தாக்அலிபேக் (சிறப்பு உதவி ஆய்வாள்ர) | 10.06.2026 | 10.06.2026 |
| | 7.திரு. ரவிசந்திரன் ( உதவி ஆய்வாளர் பணி ஓய்வு) | 16.06.2026 | 16.06.2026 |

| | |
|---|---|
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 24.06.2026 |
| vii) Details of abscondence of an Accused and his appearance / production, as the case may be; and | Nil |
| viii) Grant of stay by superior Courts and the results there of: | Nil |

இவ்வழக்கானது 04.03.2023 ந் தேதி இவ்வழக்கு STC.No.308/2023 ஆக இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், பின்னர் இந்நீதிமன்றம் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கை STC.No.308/2023 ல் இருந்து CC.No.482/2026 ஆக மாற்றப்பட்டு, 02.07.2026-ந் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.நிவேதா அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஆதிநாராயணன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 03.09.2022 ந் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் அழகியநத்தம் - தூக்கணாம்பாக்கம் செல்லும் சாலையில் களையூர் ரெட்டியார் தெருவில் கிருஷ்ணன் வீட்டின் முன்பு, சாட்சி-1 சங்கமேஸ்வரன் என்பவர் கண்டமங்கலத்தில் உள்ள அவரது மாமா வீட்டிற்கு செல்வதற்காக அவருக்கு சொந்தமான PY-01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட Yamaha FZ என்ற இருசக்கர வாகனத்தில் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அவருக்கு நேர் எதிர் திசையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த எதிரி TN-76-F-6244 என்ற பதிவெண்கொண்ட Mahendra -575 என்ற டிராக்டரில் இணைக்கப்பட்ட டிப்பரில் கரும்பு லோடு ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும்,

ஆரன்அடிக்காமலும் ஓட்டி வந்து சாட்சி-1 ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி சாட்சி-1ஐ வண்டியுடன் கீழே விழச்செய்து சாட்சி-1 வலது காலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார் என்று தூக்கணாம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279, 338 IPC -ன் படி குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

4) **குற்றச்சாட்டு :-**

எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவர் மீதான குற்றம் குறித்து வினவியபோது எதிரி தன் குற்றத்தை மறுத்தார். எதிரி தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரியிடம் இதச பிரிவுகள் 279, 338-ன் கீழ், குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு தமிழில் படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி அல்ல என கூறினார்.

5) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 16 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியாரும் விசாரிக்கப்படவில்லை.

6) **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

புகார்தாரரான (அ.சா.1) தன்னுடைய முதன்மை விசாரணை சாட்சியத்தில், கடந்த 03.09.2021 ம் தேதி கண்டமங்கலத்தில் உள்ள எனது மாமா வீட்டிற்கு நான் PY01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட எமகா இருசக்கர வாகனத்தில் பகல் 3.00

மணியளவில் களையூர் வழியாக சென்றுக்கொண்டிருந்தபோது களையூர் ரெட்டியார் தெரு அருகே சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த TN-76-F-6844 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் கரும்புலோடுடன் வந்து என் மீது மோதி, விபத்து ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய டிராக்டர் ஓட்டிவந்த நபரை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும் ஆஜர் எதிரிதான் அந்த நபராவார். எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த எனது அண்ணன் சங்கீதராஜ் மற்றும் தம்பி சசிதர் ஆகிய இருவரும் அடிப்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்தனர். அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக கல்யாண் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்தேன். கல்யாண் மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் அசாஆ.1 வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான சங்கீதராஜ் (அ.சா.2) தனது சாட்சியத்தில், கடந்த 03.09.2021 ம் தேதி கண்டமங்கலத்தில் உள்ள எங்களது மாமா வீட்டிற்கு எனது தம்பி சங்கமேஸ்வரன் அவருடைய PY-01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட எமகா இருசக்கர வாகனத்தில் பகல் 3.00 மணியளவில் களையூர் வழியாக சென்றுக்கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் சுமார் 30 மீட்டர் தூரத்ததில் நானும் எனது இன்னொரு தம்பி சசிதர் என்பவரும் எனது இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது களையூர் ரெட்டியார் தெரு அருகே வளைவில் சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த TN-76-F-6844 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் கரும்புலோடுடன் வந்து என் தம்பி வண்டி மீது மோதி, விபத்து ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய டிராக்டர் ஓட்டிவந்த நபரை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும் ஆஜர் எதிரிதான் அந்த நபராவார். அவருக்கு பின்னால் வந்த நாங்கள் இருவரும் உடனே ஓடிச்சென்று அவரை தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்து, அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக கல்யாண் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்தோம். கல்யாண்

மருத்துவமனையில் என் தம்பி சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8)** வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான சசிதர் (அ.சா.3) தனது சாட்சியத்தில், கடந்த 03.09.2021 ம் தேதி கண்டமங்கலத்தில் உள்ள எங்களது மாமா வீட்டிற்கு எனது அண்ணன் சங்கமேஸ்வரன் அவருடைய PY-01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட எமகா இருசக்கர வாகனத்தில் பகல் 3.00 மணியளவில் களையூர் வழியாக சென்றுக்கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் சுமார் 30 மீட்டர் தூரத்ததில் நானும் எனது இன்னொரு அண்ணன் சங்கீதராஜ் என்பவரும் எனது அண்ணனுடைய இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது களையூர் ரெட்டியார் தெரு அருகே வளைவில் சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த TN-76-F-6844 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் கரும்புலோடுடன் வந்து என் தம்பி வண்டி மீது மோதி, விபத்து ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய டிராக்டர் ஓட்டிவந்த நபரை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும் ஆஜர் எதிரிதான் அந்த நபராவார். அவருக்கு பின்னால் வந்த நாங்கள் இருவரும் உடனே ஓடிச்சென்று அவரை தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்று சேர்த்து, அதன்பின்னர் மேல் சிகிச்சைக்காக கல்யாண் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்த்தோம். கல்யாண் மருத்துவமனையில் என் தம்பி சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9)** பார்வை மகசர் சாட்சியான அருண்குமார் (அ.சா.4) தனது சாட்சியத்தில், 04.09.2022 ம் தேதி காலை 08.00 மணியளவில் தூக்கணாம்பாக்கம் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து அந்தயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள், அதில் நானும் இன்னொரு நபரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். என் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** மருத்துவர் தீபலட்சுமி (அ.சா.5) தனது சாட்சியத்தில், கடந்த 03.09.2022 மதியம் 4.25 மணியளவில் சங்கமேஷ்வரர், வயது 29, த/பெ. வெங்கடேசன் என்பவர் என்னிடம்

சிகிச்சைக்கு வந்தார். அவரிடம் நான் விசாரித்தபோது இரு சக்கர வாகனமும், டிரேக்டரும் களையூர் ரோட்டு வளையில் மாலை 3.00 மணியளவில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வலது கால் வளைந்த ( Deformity) நிலையில் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்தேன். அவருக்கு நுண்கதிர்படம் எடுக்க பரிந்துரை செய்தேன். அவருக்கு எடுத்த நுண்கதிர் படத்தை பார்த்தபோது அவரது வலது காலில் இரண்டு எலும்பும் கீழ் பாதியில் முறிந்து இருந்தது. 03.09.2022 அன்றே சிகிச்சைக்கு வந்த சங்கமேஷ்வரர் சொந்த விருப்பத்துடன் டிஸ்சார்ஜ் ஆகி தனியார் மருத்துவமனையில் 03.09.2022 அன்று 7.56 மணிக்கு உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அ.சா.ஆ.4 வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 -ல் உள்ள கையெழுத்து மற்றும் காயச்சான்றிதழில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முஸ்தாக்அலிபேக் (அ.சா.6) தனது சாட்சியத்தில், கடந்த 03.09.2022 ம் தேதி துாக்கணாம்பாக்கம் காவல்நிலைய பொருப்பில் இருக்கும்போது கடலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த சங்கமேஸ்வரன் த/பெ வெங்கடேசன். காமராஜர் நகர் நெல்லிக்குப்பம் என்பவர் அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக வடலூரில் உள்ள கல்யாண் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சங்கமேஷ்வரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 16 மணிக்கு காவல் நிலையம் வந்து நிலையம் துாக்கணாம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண். 367/2022 ல் சட்டப் பிரிவுகள் 279, 337 இதசவின் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா-ஆ.5 தயார் செய்து, பின்னர் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்து, பின்னர் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கின்

எதிரியை 12.09.2022ம் தேதி காலை 11 மணிக்கு தாமாக முன் வந்து காவல்நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து நிலைய பாரா வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மதியம் 12 மணிக்கு எதிரியை வேண்டும்போது நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அறிவுறுத்தி தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டும் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN-76-F-6244 என்ற பதிவெண்கொண்ட மகேந்திரா 575 என்ற டிரேக்டர் உடன் இணைக்கப்பட்ட டிப்பரையும் 23.09.2022ம் தேதி விபத்துக்குள்ளான PY-01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட எமாகா இரு சக்கர வாகனத்தையும் அதன் விபத்தின் உண்மை காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளரின் பார்வைக்கு வைத்து, முதல் புலன் விசாரணையை முடித்துக்கொண்டு மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** உதவி ஆய்வாளர் பணி ஓய்வு திரு.ரவிசந்திரன் (அ.சா.7) தனது சாட்சியத்தில், 31.10.2022 இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் கடலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. முகுந்தன் என்பவரை சந்தித்து இரண்டு வாகனத்திற்கும் மோட்டார் வாகன ஆய்வு சான்றிதழ் பெற்று விபத்தில் ஈடுபட்ட டிராக்டர் உடன் இணைந்த டிப்பரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 மற்றும் விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 பெற்று வந்து, அவர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றதில், அவர் தனது வாக்குமூலத்தில் டிராக்டருடன் இணைக்கப்பட்ட டிப்பர் மற்றும் இருசக்கர வாகனத்தின் விபத்தானது எவ்வித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று கூறியதை வாக்குமூலமாக பதிவு செய்து, பின்னர் கடலூர் அரசு தலைமை பொது மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி-1 சங்கரமேஷ்வரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திருமதி. தீபலட்சுமி அவர்களை சந்தித்து காயச்சான்றிதழ் பெற்றும், விசாரித்ததில் சாட்சி-1 சங்கரமேஷ்வரனுக்கு வலது காலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தார். அவரது வாக்குமூலத்தை தனியாக விசாரித்து பதிவு செய்து, பின்னர் காவல் நிலையம் ஆஜராகி இவ்வழக்கில் மருத்துவர் அளித்த காயச்சான்றிதழின் அடிப்படையில் சட்டப்பிரிவு 279, 337 இதசவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338

இதசவாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 தயார் செய்து, பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் முஸ்தாப்அலிபேக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதரிக்கு எதிராக இதச பிரிவு 279, 338ன் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

15) **விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து எதிரி மீதான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

16) **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**:-

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

17) இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**18)** புகாதாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், 03.09.2021-ந் தேதி தூக்கணாம்பாக்கத்தில் உள்ள எனது மாமா வீட்டிற்கு நான் PY-01-CS-6086 என்ற பதிவெண்கொண்ட எமகா இருசக்கர வாகனத்தில் பகல் 3.00 மணியளவில் களையூர் வழியாக சென்றுகொண்டிருந்தபோது களையூர் ரெட்டியார் தெரு அருகே சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த TN-76-F-6844 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் கரும்புரோலுடன் வந்து என் மீது மோதி, விபத்து ஏற்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **"விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். என் பின்னால் வந்த என் அண்ணன் மற்றும் என் தம்பி வந்த வாகனம் என் வாகனத்தில் இருந்து எவ்வளவு அடி தூரத்தில் இருந்தது என்றால் சுமார் 20 மீட்டர் தூரத்தில் இருந்தது. பின்னால் வந்த அவர்கள் 20 மீட்டர் தூரத்தில் வந்ததால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று பார்த்திருக்க முடியாது என்றால் சரிதான். பொதுவாக இருசக்கர வாகனம் கனரக வாகனத்தின் மீது மோதினால் இருசக்கர வாகனத்திற்கு அதிக சேதாரம் ஏற்படும் என்றால் சரிதான். நான் சென்ற எமகா இருசக்கர வாகனத்திற்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரிதான்**" என்று கூறியுள்ளார்.

**19)** அ.சா.2 மற்றும் அ.சா.3 தங்களது குறுக்கு விசாரணையில் **"அ.சா.1 சென்ற வாகனத்திற்கும் நான் சென்ற வாகனத்திற்கும் சுமார் 20 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லும்போது விபத்து எப்படி ஏற்பட்டது என்று நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் டிராக்டர் கரும்புடன் கூடிய பெட்டியுடன் தான் வந்தது என்றால் சரிதான். பொதுவாக கரும்பு ஏற்றிக்கொண்டு வரும்போது டிராக்டர் சாலையில் மெதுவாக தான் செல்லும் என்றால் சரிதான்**" என்று கூறியுள்ளார்கள்.

**20)** அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியங்களை கண்ணுறும்போது, ஆஜர் எதிரி தான் டிராக்டரை ஓட்டிவந்து அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தின் மீதியதாக சாட்சியம் அளித்துள்ளார்களே தவிர், எதிரி டிராக்டரை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.1 இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக சாட்சியம்

அளிக்கவில்லை.

21) மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது குறுக்கு விசாரணையில் **"அ.சா.1 சென்ற வாகனத்திற்கும் நான் சென்ற வாகனத்திற்கும் சுமார் 20 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லும்போது விபத்து எப்படி ஏற்பட்டது என்று நேரடியாக பார்க்க முடியாது என்றால் சரிதான்"** என்று கூறியுள்ளதிலிருந்து அ.சா.2 மற்றும் அ.சா.3 விபத்து சம்பத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல என்று தெரிகிறது. அ.சா.2 மற்றும் அ.சா.3 விபத்தை நேரடியாக பார்க்க முடியாது என்று சாட்சியம் அளித்துள்ளதை ஊர்ஜிதம் செய்து அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் "**என் பின்னால் வந்த என் அண்ணன் மற்றும் என் தம்பி வந்த வாகனம் என் வாகனத்தில் இருந்து எவ்வளவு அடி தூரத்தில் இருந்தது என்றால் சுமார் 20 மீட்டர் தூரத்தில் இருந்தது. பின்னால் வந்த அவர்கள் 20 மீட்டர் தூரத்தில் வந்ததால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று பார்த்திருக்க முடியாது என்றால் சரிதான்.**" என்று கூறியுள்ளார்.

22) அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணையில், " **டிராக்டர் கரும்புடன் கூடிய பெட்டியுடன் தான் வந்தது என்றால் சரிதான். பொதுவாக கரும்பு ஏற்றிக்கொண்டு வரும்போது டிராக்டர் சாலையில் மெதுவாக தான் செல்லும் என்றால் சரிதான்**" என்று கூறியுள்ளார்கள். அதன்படி பார்க்கும்போது பொதுவாக ஒரு டிராக்டர் லோடு ஏற்றிக்கொண்டு வரும்போது டிராக்டரின் சுமையின் காரணமாக மெதுவாக தான்செல்ல முடியும் என்று தெரிகிறது.

மேலும் டிராக்டர் லோடு ஏற்றிக்கொண்டு தான் வந்தது என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **"பொதுவாக கரும்பு லோடு ஏற்றிக்கொண்டு சாலையில் செல்லும்போது 30 கிலோ மீட்டர் வேகத்தில் தான் செல்லமுடியும் என்றால் சரிதான்"** என்று கூறியுள்ளார்.

மேலும், அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் **"புகாரில் வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றதாகவும், எதிரியின் வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். தயார் செய்த வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை கிழக்கு - மேற்கு**

**அமைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்**" என்று கூறியுள்ளார். அதனை கண்ணுறும்போது, விபத்து ஏற்படுத்திய திசையை குறித்து முரண்பாடாக மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேலும் அதற்கான காரணத்தையும் அ.சா.6 தனது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை. உண்மையில் அ.சா.6 சம்பவயிடம் சென்று மாதிரி வரைபடம் தயார் செய்தாரா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது.

**23)** மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்தயிடம் நிறைய வீடுகள் உள்ளது என்று கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்து சாட்சிகளாக சேர்க்கவில்லை. விசாரணை அதிகாரி தனிநபர் சாட்சிகளை விசாரிக்காதது குறித்து தனது சாட்சியத்தில் எந்த காரணமும் குறிப்பிடவில்லை.

மேலும், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் **"பொதுவாக ஒரு இருசக்கர வாகனம் கனரக வாகனத்தின் மீது மோதினால் இருசக்கர வாகனத்திற்கு அதிக சேதாரம் ஏற்படும் என்றால் சரிதான். நான் சென்ற எமகா இருசக்கர வாகனத்திற்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரிதான்**" என்று கூறியுள்ளார். அதனை கண்ணுறும்போது கனரக வாகனம் இருசக்கர வாகனத்தின் மீது மோதும்போது இருசக்கர வாகனத்திற்கு சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் இருசக்கர வாகனத்திற்கு எந்தவித சேதாரமும் இல்லை என்று அ.சா.1 கூறியுள்ளதும் இவ்வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மேலும், அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.5, அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் இருசக்கர வாகனத்தில் இருந்து நிலை தடுமாறி கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான் என்று கூறியுள்ளார்.

**24)** பார்வை மகசர் சாட்சியான அ.சா.4, தனது குறுக்கு விசாரணையில் **" போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**25)** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.முஸ்தாக்அலிபேக் (அ.சா.6), முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.5) பதிவு செய்து, மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்து மேல்விசாரணைக்காக வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.ரவிசந்திரன் (அ.சா.7)ன் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்ட அ.சா.7, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8) பெற்று வந்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.9) தயார் செய்து, எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சி அளித்துள்ளார்.

**26)** மேலும், இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கண்ணுறும் போது, இவ்வழக்கின் எதிரி தான் TN-76-F-6244 என்ற பதிவெண்கொண்ட டிராக்டரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, அ.சா.1 ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது இடித்து அ.சா.1க்கு காலில் கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் பொழுது,

**27)** வழக்கு சம்பவத்தின் புகார்தாரரான அ.சா.1, எதிரி தான் டிராக்டரை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளிக்காததாலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் 3 வரையான சாட்சிகள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ம் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**28)** எனவே இவ்வழக்கில் அ.சா.1க்கு அன்றைய தினம் அவருக்கு காலில் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்று ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும், அந்த காயங்கள் அவருக்கு ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்டது என்று நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த விபத்து எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஏற்படுத்தப்பட்டதா என்று பார்க்கும் பொழுது, அ.சா.1 எதிரி தான் டிராக்டரை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளிக்காத சூழ்நிலையிலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான

அ.சா.2 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று கூறியுள்ள சூழ்நிலையிலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையிலும், எதிரி TN-76-F-6244 என்ற பதிவெண்கொண்ட டிராக்டரை கவனக்குறைவான மற்றும் அதிவேகமாக ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்று சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**29)** முடிவாக, இவ்வழக்கில் எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 338 அ-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**30)** எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**31)** இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 02.07.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.07.02 17:40:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. சங்கமேஸ்வரன்

அசா.2 திரு. சங்கீதராஜ்

அசா.3 திரு. சசிதர்

அசா.4 திரு. அருண்குமார்

அசா.5 திருமதி. தீபலட்சுமி (மருத்துவர்)

அசா.6 திரு. முஸ்தாக்அலிபேக் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

அசா.7 திரு. ரவிசந்திரன் ( உதவி ஆய்வாளர் பணி ஓய்வு)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசாஆ.1 | 03.09.2022 | புகார் மனு |
| அசாஆ.2 | 04.09.2022 | அ.சா.4ன் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் |
| அசாஆ.3 | 31.10.2022 | விபத்து பதிவேட்டிலுள்ள அ.சா.5ன் கையொப்பம் |
| அசாஆ.4 | 31.10.2022 | அ.சா.1க்கான காயச்சான்றிதழ் |
| அசாஆ.5 | 03.09.2022 | கணினி முதல் தகவல் அறிக்கை |
| அசாஆ.6 | 03.09.2022 | மாதிரி வரைபடம் |
| அசாஆ.7 | 12.09.2022 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN-76-F-6244) |
| அசாஆ.8 | 12.09.2022 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (PY-01-CS-6086) |
| அசாஆ.9 | 12.09.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள் - இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை**

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.07.02 17:41:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.